# நபிமார்கள் பற்றிய தகவல்கள்

## 01. ஸலாம் (சாந்தி) உண்டாகட்டும் என வாழ்த்தப்பட்ட5 நபிமார்கள்

1. நூஹ் (அலைஹிஸ்ஸலாம்) ஸலாமுன் அலா நூஹ்

(அல் குர்ஆன் 37:79)

2. இப்றாஹீம் (அலைஹிஸ்ஸலாம்) ஸலாமுன் அலா இப்றாஹீம்

(அல் குர்ஆன் 37:109)

3. மூஸா (அலைஹிஸ்ஸலாம்) ஸலாமுன் அலா மூஸா

(அல் குர்ஆன் 37:120)

4. ஹாரூன் (அலைஹிஸ்ஸலாம்) வஹாரூன்

(அல் குர்ஆன் 37:120)

5. இல்யாஸ் (அலைஹிஸ்ஸலாம்) ஸலாமுன் அலா இல்யாஸீன்

(அல் குர்ஆன் 37:130)

## 02. ஸித்தீக் (உண்மையாளர்) எனப்புகழப்படும்3 நபிமார்கள்

1. இப்றாஹீம் (அலைஹிஸ்ஸலாம்). இன்னஹுகான ஸித்தீகன் நபிய்யா

(அல் (குர்ஆன் 12:46)

2. யூஸுஃப் (அலைஹிஸ்ஸலாம்). யூஸுஃப் அய்யுஸ்ஸத்தீக்

(அல் குர்ஆன் 19:41)

2. இத்ரீஸ் (அலைஹிஸ்ஸலாம்). இன்னஹுகான ஸித்தீகன் நபிய்யா

(அல் குர்ஆன் 19:56)

## 03. பொறுமையாளர்கள் எனப்பாராட்டப்பட்ட4 நபிமார்கள்

1. நெருப்பில் போடப்பட்ட நபி இப்றாஹீம் (அலைஹிஸ்ஸலாம்)
2. சிறையில் இடப்பட்ட நபி யூஸுப் (அலைஹிஸ்ஸலாம்)
3. கடும் நோயினால் வாடிய நபி அய்யூப் (அலைஹிஸ்ஸலாம்)
4. மீன் விழுங்கிய நபி யூனுஸ் (அலைஹிஸ்ஸலாம்)

இவர்கள் கடும் சோதனையிலும் பொறுமை காத்தவர்கள்

## 04. உயிரோடு இருப்பாதாக நம்பப்படும் நபிமார்களும்

1. இத்ரீஸ் (அலைஹிஸ்ஸலாம்). இவர் சுவர்க்கம் நரகம் காணச்சென்று அங்கேயே தங்கிவிட்டார்கள்.
2. இல்யாஸ் (அலைஹிஸ்ஸலாம்).
3. கிள்ரு (அலைஹிஸ்ஸலாம்). இவர் காடுகளில்,கடலோரங்களில் சுற்றித்திரிகிறார்கள்.
4. ஈஸா (அலைஹிஸ்ஸலாம்). இவர் வானுலகம் உயர்த்தப்பட்டுள்ளார்கள்.

## 05. நபியின் மகன் நபி என குர்ஆன் கூறும்6 பேர்

1. இஸ்மாயீல் இப்னு இப்றாஹீம் (அலைஹிஸ்ஸலாம்)
2. இஸ்ஹாக் இப்னு இப்றாஹீம் (அலைஹிஸ்ஸலாம்)
3. யஃகூப் இப்னு இஸ்ஹாக் (அலைஹிஸ்ஸலாம்)
4. யூஸுஃப் இப்னு யஃகூப் (அலைஹிஸ்ஸலாம்)
5. ஸுலைமான் இப்னு தாவூது (அலைஹிஸ்ஸலாம்)
6. யஹ்யா இப்னு ஸகரிய்யா (அலைஹிஸ்ஸலாம்)

## 06. பல சிறப்புகளைப் பெற்ற நபிமார்களும் ஏனையச் செய்திகளும்.

1. அபுல் பஷர்: (ஆதி மனிதர்) ஆதம் (அலைஹிஸ்ஸலாம்) ஆவார். சுவர்க்கம் செல்லும்அனைவரும் அவரவர் பெயராலேயே அழைக்கப்படுவர். ஆதம் (அலைஹிஸ்ஸலாம்) மட்டும் அபுல் பஷர் என அழைக்கப்படுவார்.

2. ஆதம் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களின் உயரம் 60 முழம். சொர்க்கம் செல்லும் எல்லா மக்களின் உயரமும் 60 முழம் தான்.

(ஆதாரம்: புகாரி 3326,3327)

3. முதலில் 'அஸ்ஸலாமு அலைக்கும்' என ஸலாம் கூறியவர் நபி ஆதம் (அலைஹிஸ்ஸலாம்)

(ஆதாரம்: புகாரி:3326)

4. ஆதம் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களின் இளையமகன் காபீல் மூத்த மகன் ஹாபீலைக் கொன்றார்

(அல் குர்ஆன்: 5:30)

5. அபுல் அன்பியா (நபிமார்களின் தந்தை) கலீலுல்லாஹ் இப்றாஹீம் (அலைஹிஸ்ஸலாம்). கியாமத் நாளில் முதன் முதலாக ஆடை அணிவிக்கப்படுபவரும் இவரே! உலகில் முதன் முதலாக ஹிஜ்ரத் செய்தவரும் இவரே! உலக மக்களுக்கு இவர் சிறந்தமுன்மாதிரியுமாவார். ( அல் குர்ஆன்: 33:21, 60:4) பகர்கின்ரது இவரே மக்களின் இமாம் (தலைவர்) என்றும் (அல் குர்ஆன்: 2:124) பகர்கின்ரது ,ஒரு சமுதாயம் என்றும் (அல் குர்ஆன்: 3:67) பகர்கின்ரது , இவரது மார்க்கத்தையும் (மில்லத்த இப்றாஹீம) வழிமுறை களையும் பின்பற்றவேண்டும் என்றும் (அல் குர்ஆன்: 60:4) பகர்கின்ரது இவரே முதன் முதலில் இஸ்லாத்தை பின்னற்றுவோருக்கு முஸ்லிம் என்றும் பெயர் சூட்டினார் (அல் குர்ஆன்: 22:78) பகர்கின்ரது இவர் கலீல் – நண்பர் (அல் குர்ஆன்: 4:125) பகர்கின்ரது என்றும், ஸித்தீக் – உண்மையாளர் (அல் குர்ஆன்: 19-41) பகர்கின்ரது என்றும், ஹலீம் – பொறுமையாளர் (அல் குர்ஆன்: 1:75) பகர்கின்ரது என்றும், அவ்வாஹ்,முனீப் - நம்மை நோக்கித் திரும்புபவர் (அல் குர்ஆன்: 11:75) பகர்கின்ரது என்றும் இறைவன் பலவாறு திருமறையில் புகழ்ந்துரைக்கிறான். இவர்கள் அபுள்ளியாஃத் (விருந்தினரின் தந்தை) என்றும் புகழப்படுகிறார்.

6. 'அப்தன் ஷக்கூர் ' (நன்றியுள்ள அடியார்) என்றும் , அவ்வலுர்ருஸுல் (முதல் ரஸுல்) என்றும் அழைக்கப்படுபவர் நபி நூஹ் (அலை ஹிஸ்ஸலாம்) (அல் குர்ஆன்:17:3) 950 வருடம் பிரச்சாரம்செய்தவர். இவர் பயணம் செய்த கப்பல் இன்றும் பாதுகாக்கப்பட்டுள்ளது.

7. 'அலீம்' (அறிவார்ந்தவர் (அல் குர்ஆன்:15:53,51:28) பகர்கின்ரது எனவும், "ஸாதிகுல் வஃது " வாக்குறுதி காப்பவர் (அல் குர்ஆன்: 19:54) பகர்கின்ரது எனவும் அழைக்கப்பட்டவர் தபீஹுல்லாஹ் அறுத்துப்பலியிடஅழைத்துச் செல்லப்பட்டவர். (அல் குர்ஆன்: 37:102) பகர்கின்ரது

நபி இஸ்மாயீல் (அலைஹிஸ்ஸலாம்) (அல்குர்ஆன்:37:102) ஆவார்.

8. ‘ஹலீம்’ (பொறுமையாளர் (அல் குர்ஆன்:37:101) என அழைக்கப்பட்டவர் நபி ‘இஸ்ஹாக்’ (அலைஹிஸ்ஸலாம்).

9. நபிமார்களில் நாவலர் (கதீபுல் அன்பியா) நபி சுஐப் (அலைஹிஸ்ஸலாம்)

10.சொல்லாற்றல் மிக்கவர் நபி ஹாரூன் (அலைஹிஸ்ஸலாம்)

11. சுவர்க்கவாசிகளின் முதல் உணவு மீனின் ஈரல் பகுதியாகும்.

(ஆதாரம்:புகாரி-3329) பகர்கின்ரது

12. பேனாவினால் முதன் முதலில் எழுதிவரும் வானியலை ஆராய்ந்தவரும் நபி இத்ரீஸ் (அலைஹிஸ்ஸலாம்).

13. ‘ஸித்தீகா’ (பெண்களில் உண்மையாளர்) , கற்பு மிக்கவர் (அல் குர்ஆன்: 66:12), பகர்கின்ரது கானித்தா (இறைவனுக்கு முற்றிலும் கட்டுப்பட்டவர் , (அல் குர்ஆன்: 66:12), பகர்கின்ரது ‘உலகிற் சிறந்த பெண்’ (அல் குர்ஆன்: 3:42) பகர்கின்ரது என்றெல்லாம் இறைவனால் புகழப்பட்டவரும் , அவர் பெயராலேயே ஒரு அத்தியாயமும் அருளி குர்ஆனில் கூறப்படும் ஒரே பெண்மணியும் , ஆகிய அவரே மர்யம் (அலைஹிஸ்ஸலாம்). இவர் ஈஸா நபி (அலைஹிஸ்ஸலாம்)மின் தாயாரகும் பேறுபெற்றவர். இவரின்பிறப்பும்,வாழ்வும்,குடும்பமும் ஒர் அத்தாட்சி என்றே (அல் குர்ஆன்: 3:33,34) பகர்கின்ரது குர்ஆன் கூறுகிறது.

14. நபி இல்யாஸின் சமூகத்தார் வணங்கிய தெய்வம் ‘பஅல் ‘ஆகும் (அல் குர்ஆன்: 37:125)

15. நபி நூஹ் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களின் மக்கள் வணங்கிய தெய்வங்கள் “வத்து,ஸுவாவு,யகூஸ்,யவூக்,நஸ்ர்” ஆகியவைகளாகும் (அல் குர்ஆன்: 71:23)

16. அல்பைத்துல் முகத்தஸை முதன் முதலாகக் கட்டியவர் நபி யஃகூப் (அலைஹிஸ்ஸலாம்) அதைப் புனர் நிர்மாணம் செய்தவர் நபி சுலைமான் (அலை ஹிஸ்ஸலாம்).

17. பறவைகளின் மொழியைத் தெரிந்தவரும் , காற்றை வசப்படுத்திக் கொடுக்கப்பட்டவரும் , தந்தைக்குப்பிறகு அரசாண்டவரும் நபி சுலைமான் (அலைஹிஸ்ஸலாம்) ஆவார்.

18. அழகில் சிறந்த நபி யூசுப் (அலைஹிஸ்ஸலாம்).

19. யூசுப் நபி (அலைஹிஸ்ஸலாம்)மின் சகோதரர் புன்யாமீன் ஆவார்.

20. கிணற்றில் 3 நாட்களும் சிறையில் 7 நாட்களும் சிறை செய்யப்பட்டவர் நபி யூசுப் (அலைஹிஸ்ஸலாம்) ஆவார். பின்னர் இவர் எகிப்தில் அமைச்சராகஇருந்தார்.

21. ‘அல்கரீம் இப்னுல் கரீம் இப்னுல் கரீம் இப்னுல் கரீம் ’ (கண்ணியமிக்கவரின் மகன், அவரது தந்தை கண்ணியமிக்கவரின் மகன் , அவரது தந்தை கண்ணியமிக்கவரின் மகன் , அவரது தந்தை கண்ணியமிக்கவரின் மகன் ,) என நபிகளால் பெருமையாகப் போற்றப்பட்டவர் நபி யூசுப் (அலைஹிஸ்ஸலாம்) இப்னு நபி யஃகூப் (அலைஹிஸ்ஸலாம்) இப்னு நபி இஸ்ஹாக (அலைஹிஸ்ஸலாம்) இப்னு நபி இப்றாஹீம் (அலைஹிஸ்ஸலாம்) ஆவார்கள்.

22. தாவூது (அலைஹிஸ்ஸலாம்) கொடியவன் ஜாலூத்தைக் கொன்றார்கள். (அல்குர்ஆன்:2:251)

23. இறைவனே பெயர் சூட்டடிய இறைதூதர் நபி யஹ்யா (அலை ஹிஸ்ஸலாம்) ஆவார். (அல்குர்ஆன்:19:7)

24. 'தொட்டிலில் பேசிய குழந்தை ' என இறைவன் இறைதூதர் ஈஸா (அலைஹிஸ்ஸலாம்) அவர்களை புகழ்ந்துரைக்கிறான் (அல் குர்ஆன்: 19:29,30)

25. உலகில் படைக்கப்பட்ட முதற் பெண் ஹவ்வா (அலைஹிஸ்ஸலாம்) ,ஆதம் (அலைஹிஸ்ஸலாம்) வலது விலா எலும்பிலிருந்து படைக்கப்பட்டார்.

26. இப்றாஹீம் (அலைஹிஸ்ஸலாம்) அவர்கள் தமது 80-வது வயதில் விருத்த சேதனம் செய்து கொண்டார்கள். (ஆதாரம் புகாரி-3356)

27. இப்றாஹீம் (அலை ஹிஸ்ஸலாம்) அவர்களை மன்னன் நம்ரூத் நெருப்புக்குண்டத்தில் வீசியபோது நெருப்புக்குண்டம் இதமான பூம்பொழிலாக மாறியது. (அல் குர்ஆன்: 21:69)

**ஐந்து பேர் கண்ட கனவுகள்**

28. இறைதூதர்கள் இப்றாஹீம் (அலைஹிஸ்ஸலாம்) (அல் குர்ஆன்: 37:102) யூசுஃப் (அலைஹிஸ்ஸலாம்) (அல் குர்ஆன்: 12:4) நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) (அல் குர்ஆன்: 8:43) ,மலிக் மிஸ்ர் (எகிப்து மன்னர்)- (அல் குர்ஆன்: 12:43) சிறைவாசிகள் (அல் குர்ஆன்: 12:36) இவ்வாறுஐந்து பேர் கண்ட கனவுகள் குர்ஆனில் விளக்கப்படுகின்றன.

www.bathusha.com
Tamil Islamic Online Radio 24h

**உண்மையும் நன்மையும் உன்னிலும் என்னிலும் உண்டாகட்டும்**

**AL ALIM S.A.M.SEYED JAHAN MOWLANA HUSAINY JALALIY**

**BATHUSHA.COM**